திரு. சி. ஆறுமுகம்: சென்னை நகரத்தை ஒட்டிய கேள்விகளை சென்னை நகர உறுப்பினர்கள்தான் கேட்க வேண்டும் என்றால், சென்னை நகரத்திற்கு மட்டும்தான் இந்த சட்டச் சபையா? தமிழ்நாடு முழுவதற்கும்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் மதுராந்தகம் தொகுதி உறுப்பினர். அடுத்து வினா எண். 182.

கல்லூரி மாணவியர் விடுதிகளில் மருத்துவ வசதி.

*வினா எண். 182—திரு. கா. சுப்பிரவேலு: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசுக் கல்லூரி மாணவிகள் விடுதிகளில் மருத்துவ வசதிகள் அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: கல்லூரிக் கல்வி இயக்குநரின் கீழ் இயங்கிவரும் 13 பெண்கள் கலைக் கல்லூரிகள், 2 பயிற்சிக் கல்லூரிகள் ஆகியவற்றுள் 14 கல்லூரிகளில் மாணவியர் விடுதிகள் உள்ளன, அவற்றுள் 6 கல்லூரிகளுக்கு தற்போது மருத்துவ வசதி உள்ளது,

மருத்துவ வசதியற்ற கல்லூரிகளின் விடுதி மாணவிகள் நோய்வாய்ப்பட்டால். தக்க துணையுடன் அருகிலுள்ள அரசினர் மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் பெற்று சிகிச்சை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது,

[முற்பகல் 9-30]

திரு. கோ. இளங்கோவன்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் மருத்துவ வசதி ஆறு கல்லூரி மாணவிகள் விடுதிகளில் அளிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். எந்த வகையில் மருத்துவ வசதிகள அளிக்கப்படுகிறது? மருத்துவர்கள் அங்கே எந்த முறையில் நியமிக்கப்பெற்று பணியாற்றுகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, இராணி மேரிக் கல்லூரியில் மருத்துவ மனை உள்ளது, முழு நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மருத்துவ மனையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு உண்டான ஊதியம் அளிக்கப்படுகின்றது.

1979 பிப்ரவரி 26]

அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. தஞ்சாவூர். அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. கும்பகோணம். எம், சி, முத்தையாபிள்ளை அரசினர் மகளிர் கலைக் கல்லூரி. திண்டுக்கல் ஆகிய கல்லூரிகளில் பகுதிநேர மருத்துவர்கள் உள்ளனர், அவர்களுக்கு மாதம் ரூ. 100 ஊதியம் வழங்கப் பெறுகிறது,

வெலிங்டன் சீமாட்டி பயிற்சிக் கல்லூரி. சென்னையில் முழு நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மருத்துவ மனையில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு உண்டான ஊதியம் வழங்கப் பெறுகிறது.

சென்னை காயிதே மில்லத் அரசினர் கலைக் கல்லூரியில் பகுதி நேர மருத்துவர் உள்ளார். அவருக்கு மாதம் ரூ, 150 ஊதியம் அளிக்கப்படுகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார். அரசினர் கல்லூரிகளிலே உள்ள மாணவிகளுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்திருப்பது போலவே தனியார் துறை கல்லூரிகளிலே உள்ள மாணவிகளுக்கு மருத்துவ வசதிகள் செய்வதற்கு அரசு தரப்பிலே ஏதாவது உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அதுபற்றி விவரம் என்னிடத்தில் இல்லை, தனியாக கேள்வி கேட்டால் பதிலைச் சேகரித்துத் தரப்படும்.

மத்திய கிழக்கு நாடுகளில் வேலை வாய்ப்பு.

*வினா எண் 183—திரு. எஸ். கணேசன் :

திரு. சேலம் மு. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்பைத் தேடிச் செல்ல விரும்பும் இளைஞர்களுக்கு உதவ தமிழக அரசு ஒரு குழுவை அமைக்க உத்தேசித்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் :

(அ) ஆம்.

(ஆ) வெளிநாடுகளில். அதிலும் குறிப்பாக மேற்கு ஆசிய நாடுகளிலே புதியதாக ஏற்பட்டு வரும் வேலை வாய்ப்புகளை தமிழ்நாட்டில் உள்ளவர்கள் முறையாக பயன்படுத்தி பலனடை